**செப்டம்பர் – 11**

# TNPSC துளிகள்

- ஜப்பானின் பிரதமர் ஷிகெரு இஷிபா, தனது லிபரல் டெமாக்ரடிக் கட்சித் தேர்தலில் தோல்வியடைந்ததற்குப் பிறகு, ஓராண்டிற்கும் குறைவான காலத்தில் பதவியில் இருந்த பிறகு இராஜினாமா செய்தார்.
- கார்லோஸ் அல்கராஸ் (ஸ்பெயின்) ஜானிக் சின்னரை (இத்தாலி) தோற்கடித்து 2025 ஆம் ஆண்டு அமெரிக்க டென்னிஸ் ஓபன் ஆடவர் ஒற்றையர் பிரிவுப் போட்டியில் பட்டத்தை வென்றார், அதே நேரத்தில் அரினா சபலென்கா (பெலாரஸ்) மகளிர் ஒற்றையர் பிரிவுப் போட்டியில் தனது இரண்டாவது தொடர்ச்சியான சாம்பியன்ஷிப் பட்டத்தினைப் பெற்றார்.
- ஜப்பானைச் சேர்ந்த கோகிச்சி அகுசாவா தனது 102வது வயதில் ஃபுஜி சிகரத்தினை அடைந்த மிக வயதான நபர் என்ற பெருமையுடன் கின்னஸ் உலக சாதனையைப் படைத்துள்ளார்.
- அக்டோபர் 11 முதல் 15 ஆம் தேதி வரையில் புவனேஸ்வரில் (ஒடிசா) 28வது ஆசிய அளவிலான டேபிள் டென்னிஸ் அணி சாம்பியன்ஷிப் போட்டியை இந்தியா நடத்த உள்ளது, இதன் மூலம் ஒரு மாநிலம் ஆசிய அளவிலான டேபிள் டென்னிஸ் போட்டியை நடத்துவது முதல் முறையாகும்.
- இந்தியாவின் ஆடவர் கூட்டு வில்வித்தை அணியானது, தென் கொரியாவின் குவாங்ஜுவில் நடைபெற்ற உலக சாம்பியன்ஷிப் போட்டியில் பிரான்சு அணியினை வீழ்த்தி அதன் முதல் தங்கப் பதக்கத்தை வென்றது.
- 11வது ஆசிய நீர் சார்ந்த விளையாட்டுகளுக்கான சாம்பியன்ஷிப் போட்டியானது இந்தியாவில் முதன்முறையாக 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 28 முதல் அக்டோபர் 11 ஆம் தேதி வரை குஜராத்தின் அகமதாபாத்தில் நடைபெற உள்ளது.
- இளையோர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சகம் மற்றும் இந்திய நீச்சல் கூட்டமைப்பு ஆகியவை ஜல்வீர் சின்னத்தையும் அதிகாரப்பூர்வ முத்திரையையும் புது டெல்லியில் அறிமுகப்படுத்தின.
- நேபாளம் மற்றும் சீனாவின் மக்கள் விடுதலை இராணுவம் ஆனது 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 21 முதல் அக்டோபர் 01 ஆம் தேதி வரை சீனாவில் 'சாகர்மாதா நட்புறவு' என்ற கூட்டுப் பயிற்சியை நடத்த உள்ளன.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## சீமைக் கருவேலம் இல்லா கிராமங்கள்


- 32 மாவட்டங்களில் உள்ள 517 கிராமங்கள் சீமைக் கருவேலம் (புரோசோபிஸ் ஜூலிஃப்ளோரா) இல்லா கிராமங்களாக அறிவிக்கப்பட்டுள்ளதாக தமிழக அரசு சென்னை உயர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.
- அயல் ஊடுருவல் இனமான சீமை கருவேலம் உள்ளூர் சூழலியல் மற்றும் நிலத்தடி நீர் பாதுகாப்பிற்கு தீங்கு விளைவிப்பதாக கருதப்படுகிறது.
- ஒரு சோதனை முன்னெடுப்பாக குறைந்தது ஒரு முழு மாவட்டத்தையும் சீமை கருவேலம் இல்லாத மாவட்டமாக மாற்றுமாறு சென்னை உயர் நீதிமன்றம் மாநிலத்திடம் கோரியது.
- சீமை கருவேலத்திற்குப் பதிலாக உள்நாட்டு மர இனங்களை வளர்ப்பதற்கான செயல்

திட்டத்தைத் தயாரிப்பதற்காக, 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 25 ஆம் தேதியன்று மாநில அரசு ஓர் உயர்மட்டக் கூட்டத்தை நடத்தியது.




# தேசியச் செய்திகள்

## PVTG குழுக்களுக்கான தனி மக்கள் தொகைக் கணக்கெடுப்பு




- வரவிருக்கும் மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் எளிதில் பாதிக்கப்படக் கூடிய பழங்குடி இனக் குழுக்களை (PVTGs) தனித்தனியாகக் கணக்கிடுமாறு தலைமைப்

பதிவாளர் மற்றும் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு ஆணையரைப் பழங்குடியின விவகார அமைச்சகம் வலியுறுத்தியுள்ளது.

- 700க்கும் மேற்பட்ட பழங்குடியினச் சமூகங்களில், 18 மாநிலங்கள் மற்றும் அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளின் ஒன்றியப் பிரதேசத்தில் வசிக்கும் 75 சமூகங்கள் ஆனது PVTG குழுக்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன.
- 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் போது பட்டியலிடப்பட்டப் பழங்குடியினர் பற்றிய தரவுகள் சேகரிக்கப்பட்டாலும், PVTG குழுக்களுக்கான தனித் தரவுகள் சேகரிக்கப்படவில்லை என்று அமைச்சகம் குறிப்பிட்டது.
- பிரதான் மந்திரி ஜன்ஜாதி ஆதிவாசி நியாய மகா அபியான் (PM-JANMAN) போன்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்ட நலத் திட்டங்களுக்கு PVTG குழுக்களின் துல்லியமான கணக்கெடுப்பு அவசியமாகும்.
- 2023 ஆம் ஆண்டு நவம்பர் 15 ஆம் தேதியன்று தொடங்கப்பட்ட PM-JANMAN, மூன்று ஆண்டுகளுக்குள் வீட்டுவசதி, குடிநீர், கல்வி, சுகாதாரம், ஊட்டச்சத்து, இணைப்பு, மின்சாரம் மற்றும் வாழ்வாதார வாய்ப்புகளை வழங்குவதன் மூலம் PVTG குழுக்களின் வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பெரும்பாலும் தொலைதூர மற்றும் அணுக முடியாத பகுதிகளில் வாழ்கின்ற PVTG குழுக்கள் மோசமான சுகாதாரம், குறைந்த கல்வியறிவு மற்றும் அடிப்படைச் சேவைகளுக்கான வரையறுக்கப்பட்ட அணுகல் உள்ளிட்ட உள்ளார்ந்த சமூக-பொருளாதாரச் சவால்களை எதிர்கொள்கின்றனர்.
- 1960 ஆம் ஆண்டுகளில் தேபர் ஆணையம் ஆனது முதலில் இந்தக் குழுக்களை தேக்கமடைந்த மக்கள் தொகை, குறைந்த கல்வியறிவு மற்றும் விவசாயத்திற்கு முந்தைய பொருளாதாரங்களின் அடிப்படையில் வகைப்படுத்தியதோடு பின்னர் இது 'பழமையான பழங்குடியினக் குழுக்கள்' என்று அழைக்கப்பட்டது.

## அதிவேக சாலை வலையமைப்பின் விரிவாக்கம்

- இந்தியா 2033 ஆம் ஆண்டிற்குள் அதன் அதிவேக சாலை வலையமைப்பை விரிவுபடுத்துவதற்காக 11 லட்சம் கோடி ரூபாய் (125 பில்லியன் அமெரிக்க டாலர்கள்) முதலீடு செய்ய உள்ளது.
- இந்தத் திட்டத்தில் மணிக்கு 120 கிலோமீட்டர் வரை வேகத்தில் இயங்குவதை அனுமதிக்கும் வகையிலான 17,000 கிலோமீட்டர் தூர அணுகல் கட்டுப்பாட்டுச் சாலைகளை கட்டமைப்பதும் அடங்கும்.
- 2025 ஆம் ஆண்டு மார்ச் மாத நிலவரப்படி, 146,000 கிலோமீட்டருக்கும் அதிகமான தூரத்தை உள்ளடக்கிய இந்தியாவின் தேசிய நெடுஞ்சாலை வலையமைப்பில் 4,500 கிலோ மீட்டர்கள் தூர சாலைகள் மட்டுமே அதிவேக இயக்கத்திற்கான தரநிலைகளைப் பூர்த்தி செய்கின்றன.
- முன்மொழியப்பட்ட அதிவேக வழித்தடங்களில் சுமார் 40 சதவீதம் ஏற்கனவே கட்டுமானத்தில் உள்ளன என்ற நிலையில் மேலும் 2030 ஆம் ஆண்டிற்கு முன்பு கட்டி முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- மீதமுள்ள திட்டங்கள் 2028 ஆம் ஆண்டிற்குள் தொடங்கி 2033 ஆம் ஆண்டிற்குள் கட்டி முடிக்க இலக்கு வைக்கப்பட்டுள்ளன.
- 15 சதவீதத்திற்கும் அதிகமான வருமானம் ஈட்டும் திட்டங்கள் ஆனது தனியார் சுங்க வசூலை அனுமதிக்கின்ற கட்டமைத்துச் செயல்படுத்தும் (BOT) மாதிரியைப் பின்பற்றும்.
- மற்ற திட்டங்கள் அரசு தனியார் பங்களிப்பு மாதிரியை (HAM) பயன்படுத்தும் என்ற

நிலையில் இதில் கட்டுமானச் செலவுகளில் 40 சதவீதத்தை அரசாங்கம் முன்கூட்டியே செலுத்துகிறது.

- 2024–25 ஆம் ஆண்டில், இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் ஆனது 2.5 டிரில்லியன் டாலர் செலவிட்டது என்ற நிலையில் இது முந்தைய ஆண்டை விட 21 சதவீதம் அதிகமாகும்.
- 2025–26 ஆம் ஆண்டிற்கு, சாலை மற்றும் நெடுஞ்சாலை மேம்பாட்டிற்காக மத்திய அரசு 2.9 டிரில்லியன் டாலர் ஒதுக்கியுள்ளது.




## லித்தியம்-அயனி மின்கல உற்பத்தி ஆலை




- இந்தியாவின் மிகப்பெரிய லித்தியம்-அயனி (Li-ion) மின்கல உற்பத்தி ஆலை 2025 ஆம்

ஆண்டு செப்டம்பர் 05 ஆம் தேதியன்று ஹரியானாவின் குர்கானில் உள்ள சோஹ்னாவில் திறக்கப்பட்டது.

- இது இந்தியாவின் மொத்த 50 கோடி மின்கலத் தொகுப்புகளுக்கான தேவையில் கிட்டத்தட்ட 40 சதவீதத்தினைப் பூர்த்தி செய்யும்.
- இந்த வசதியானது மத்திய அரசின் மின்னணு உற்பத்தி தொகுப்புத் (EMC) திட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது.
- லித்தியம்-அயனி (Li-ion) மின்கலங்கள் கிராஃபைட் (எதிர்மறை மின்முனை) மற்றும் லித்தியம் உலோக ஆக்சைடுகள் (நேர்மறை மின்முனை) இடையே நீர் அல்லாத மின்பகுளி மூலம் நகரும் லித்தியம் அயனிகளுடன் மின்னேற்றம் செய்யக் கூடியவை.
- ஒரு கிலோகிராமுக்கு 75-200 வாட்-மணிநேரம் என்ற அதிக ஆற்றல் செறிவினை வழங்குகின்ற இவை, இலகுவானவை என்பதோடு குறைவான நச்சு உலோகங்களைப் பயன்படுத்துகின்றன என்ற நிலையில் மேலும் நல்ல சுழற்சி நிலைத்தன்மை மற்றும் செயல்திறனை இவை வழங்குகின்றன.

# சர்வதேசச் செய்திகள்


## உக்ரைனின் போருக்குப் பிந்தைய பாதுகாப்பு




- நிலம், கடல் மற்றும் வான்வழி ஆதரவை உள்ளடக்கிய இருபத்தி ஆறு நாடுகள் உக்ரைனுக்கு போருக்குப் பிந்தையப் பாதுகாப்பு உத்தரவாதங்களை உறுதியளித்து உள்ளன.
- உக்ரைனை ஆதரிக்கும் 35 நாடுகளின் தலைவர்களுடன் பாரிசில் நடைபெற்ற உச்சி மாநாட்டிற்குப் பிறகு பிரெஞ்சு அதிபர் இம்மானுவேல் மக்ரோன் இந்த உறுதி மொழியை அறிவித்தார்.
- எதிர்கால ரஷ்ய ஆக்கிரமிப்பைத் தடுக்கும் நோக்கில், போர் முடிந்த உடனேயே இந்த உத்தரவாதங்கள் செயல்படுத்தப்பட உள்ளன.
- ஐரோப்பியத் தலைவர்கள் மற்றும் அதிபர் விலாடிமிர் ஜெலென்ஸ்கியுடனான கலந்துரையாடல்களைத் தொடர்ந்து, இந்த உத்தரவாதங்களுக்கு அமெரிக்கா தனது பங்களிப்பை முடிவு செய்து வருகிறது.
- பிரான்சும் ஐக்கியப் பேரரசும் போருக்குப் பிந்தைய படைப் பிரிவுகளை அனுப்ப

அவற்றின் விருப்பத்தினைத் தெரிவித்த அதே நேரத்தில் இத்தாலி மற்றும் பல்கேரியா போன்ற நாடுகள் போர் சாராத ஆதரவை வழங்கின.

## ஆப்பிரிக்காவில் mpox தொற்று




- mpox தொற்று ஆனது ஆப்பிரிக்காவில் இனி சர்வதேச கவலைக்குரிய பொது சுகாதார அவசரநிலையாகக் கருதப்படாது என்று உலக சுகாதார அமைப்பு (WHO) அறிவித்தது.
- 2024 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் காங்கோ மற்றும் அருகிலுள்ள ஆப்பிரிக்க நாடுகளில் பாலியல் பரவுதல் உட்பட நெருங்கிய தொடர்பு மூலம், புதிய வகையான mpox வைரஸ் பரவத் தொடங்கியது.
- சம்பந்தப்பட்ட வைரஸ் மாற்றுரு, புருண்டி, உகாண்டா மற்றும் காங்கோ ஜனநாயகக் குடியரசில் மிகவும் கடுமையானதாகவும், பரவலாகவும் காணப்பட்ட கிளேட் I வகையைச் சேர்ந்தது.
- mpox வைரஸின் Clade II ஆனது, அமெரிக்கா போன்ற நாடுகளில் நூற்றுக்கணக்கான தினசரிப் பாதிப்புகள் பதிவாகியதுடன் 2022 ஆம் ஆண்டில் உலகளாவியப் பெருந் தொற்றினை ஏற்படுத்தியது.
- பாதிக்கப்பட்டப் பகுதிகளில் மேம்படுத்தப்பட்ட பொது சுகாதார நடவடிக்கைகள் மற்றும் அதிகரித்தச் சோதனைத் திறன் ஆகியவை பாதிப்பு எண்ணிக்கையில் தொடர்ச்சியான சரிவுக்கு வழி வகுத்தன.


# பொருளாதாரச் செய்திகள்

## சிறு வணிக கடன் சந்தை

- 6.0 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான சிறு வணிக கடன் தொகுப்புடன் மகாராஷ்டிரா முதலிடத்தில் உள்ளது.
- அதைத் தொடர்ந்து தமிழ்நாடு, குஜராத் (3.69 லட்சம் கோடி ரூபாய்), உத்தரப் பிரதேசம் (3.61 லட்சம் கோடி ரூபாய்), கர்நாடகா (3.18 லட்சம் கோடி ரூபாய்) உள்ளன.
- 2025 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் தேதி நிலவரப்படி, தமிழ்நாட்டின் சிறு வணிக கடன் தொகுப்பு 4.21 லட்சம் கோடி ரூபாயாக இருந்தது என்ற நிலையில் இது 2024 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் பதிவான 3.64 லட்சம் கோடி ரூபாயிலிருந்து 15.7% அதிகமாகும்.
- இந்தியாவின் மொத்த சிறு வணிகக் கடனில் தமிழ்நாடு 9.3% பங்கைக் கொண்டுள்ளது.
- நிறுவன இருப்பைக் கொண்ட தனி உரிமையாளர்கள் மற்றும் தனி

உரிமையாளர்களின் கடன் வாங்குபவர் பிரிவுகளில் முறையே 11% மற்றும் 8.8% பங்குகளுடன் தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் உள்ளது.

- நிறுவனக் கடன் வாங்குபவர் பிரிவில், தமிழ்நாடு 7.9% பங்கைக் கொண்டிருந்தது என்ற நிலையில் குஜராத் 9.7% உடன் இதில் இரண்டாவது இடத்தில் இருந்தது.
- தமிழ்நாட்டின் சிறு வணிக கடன் தொகுப்பிற்கு சென்னை 10.6% பங்களித்தது, அதே நேரத்தில் மாநிலத்தின் PAR (ஆபத்தில் உள்ள நிதி தொகுப்புகள்) 91–180 ஆனது 2025 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் 1.7% ஆக இருந்தது.
- இது இந்திய சிறு தொழில்கள் மேம்பாட்டு வங்கி (SIDBI) மற்றும் கடன் பணியகம் CRIF ஹை மார்க் ஆகியவற்றின் ஒரு கூட்டு அறிக்கையாகும்.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## நீரில் கரையக்கூடிய உரத் தொழில்நுட்பம்




- ஏழு ஆண்டுகால ஆராய்ச்சிக்குப் பிறகு இந்தியா உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட தனது முதல் நீரில் கரையக் கூடிய உர தொழில்நுட்பத்தை உருவாக்கியுள்ளது.

- இந்தத் தொழில்நுட்பம் ஆனது சுரங்க அமைச்சகத்தால் ஆதரிக்கப்படுகிறது மற்றும் இந்திய மூலப்பொருட்கள் மற்றும் தாவர வடிவமைப்புகளைப் பயன்படுத்துகிறது.
- இது தற்போது இந்தியாவின் இறக்குமதியில் முன்னிலை வகிக்கும் சீனச் சிறப்பு உரங்களை 95% சார்ந்திருப்பதைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தச் செயல்முறை மூலம் ஒற்றை, கழிவுகள் அற்ற, உமிழ்வு இல்லாத முறை மூலம் பல வகையான உரங்களை உற்பத்தி செய்ய முடியும்.

## ஜம்மு மற்றும் காஷ்மீரில் புதிய ரேடார்கள்




- வானிலை முன்னறிவிப்பு மற்றும் முன் எச்சரிக்கை அமைப்புகளை மேம்படுத்துவதற்காக மௌசம் திட்டத்தின் கீழ் ஜம்மு மற்றும் காஷ்மீரில் நான்கு கூடுதல் வானிலை ரேடார்கள் நிறுவப்பட உள்ளன.
- தற்போது, ஜம்மு மற்றும் காஷ்மீர் ஒன்றியப் பிரதேசங்களில் மூன்று ரேடார்கள் செயல்பாட்டில் உள்ளன.
- திடீர் வானிலை மாற்றங்கள் ஆனது, கடுமையான மழை மற்றும் வெள்ளத்தை ஏற்படுத்துதல் குறித்து எச்சரிக்கை செய்வதற்கான முதன்மை நேரத்தை அதிகரிப்பதை இந்த நிறுவல் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஜூன் 1 முதல் ஆகஸ்ட் 31 ஆம் தேதி வரையிலான பருவமழை நாடு முழுவதும் இயல்பை விட 6% அதிகமாக பதிவானது.
- ஜம்மு, காஷ்மீர், உத்தரக்காண்ட், பஞ்சாப், ஹரியானா, இராஜஸ்தான், உத்தரப் பிரதேசம் மற்றும் டெல்லி உள்ளிட்ட வடமேற்கு இந்தியாவில் வழக்கத்தை விட 26% அதிக மழைப் பொழிவு பதிவாகியுள்ளது.
- மத்தியத் தரைக் கடலில் இருந்து மேற்கு நோக்கி வரும் காற்றுகள்/இடையூறுகள் மற்றும் வங்காள விரிகுடாவிலிருந்து வடக்கு நோக்கி நகரும் புயல்களின் இணைவினால் தீவிரப் பருவமழை ஏற்பட்டது.
- 1980 ஆம் ஆண்டிலிருந்து அதிகரித்து வரும் மழைப் பொழிவு போக்கைத் தொடர்ந்து, செப்டம்பர் மாதம் வரை இந்த தீவிர பருவமழைப் போக்கு தொடரும் என்று இந்திய வானிலை ஆய்வுத் துறை (IMD) எதிர்பார்க்கிறது.

## புதிய பெருங்குடல் புற்றுநோய் தடுப்பூசி

- ரஷ்யாவின் கூட்டாட்சி மருத்துவ உயிரியல் நிறுவனம் (FMBA) ஆனது அதன் mRNA அடிப்படையிலான பெருங்குடல் புற்றுநோய் தடுப்பூசியின் மருத்துவப் பயன்பாட்டிற்கு முந்தைய சோதனைகளை அதிக செயல்திறன் மற்றும் பாதுகாப்புடன் நிறைவு செய்தது.
- இந்தத் தடுப்பூசி பெருங்குடல் புற்றுநோயை இலக்காகக் கொண்டுள்ளது மற்றும் 60% முதல் 80% வரையிலான கட்டி குறைப்பு விகிதங்களை வழங்கியது.
- பெருங்குடல் புற்றுநோய் ஆனது, பெருங்குடல் மற்றும் மலக்குடல் இரண்டையும் உள்ளடக்கியவற்றைப் பாதிக்கும் பெருங்குடல் புற்றுநோய் என்றும் அழைக்கப் படுகிறது.
- இது செரிமான அமைப்பின் ஒரு பகுதியாக இருக்கும் பெரிய குடலில் (பெருங்குடல்) தொடங்கும் ஒரு வகைப் புற்றுநோயாகும்.





# மாநிலச் செய்திகள்

## ஒருங்கிணைந்த வெப்பம் மற்றும் குளிரூட்டும் செயல் திட்டம்

- iFOREST மற்றும் புவனேஸ்வர் மாநகராட்சிக் கழகம் ஆகியவை நகரத்திற்கான ஒருங்கிணைந்த வெப்பம் மற்றும் குளிரூட்டும் செயல் திட்டத்தை வெளியிட்டன.
- நகரத்திற்கும், கிராமப்புறங்களுக்கும் இடையிலான வெப்பநிலை வேறுபாடு தற்போது 2.0 முதல் 5.0 டிகிரி செல்சியஸ் வரை உள்ளது.
- 2024 ஆம் ஆண்டில் 230 நாட்கள் ஆரஞ்சு அல்லது மஞ்சள் எச்சரிக்கை நாட்களாகத் தகுதி பெற்றதுடன், புவனேஸ்வரில் வெப்ப அழுத்தம் அக்டோபர் மாதம் வரை நீடிக்கும்.
- 2050 ஆம் ஆண்டில், புவனேஸ்வரில் ஒரு வழக்கமான வெப்பமான நாள் ஆனது இன்றைய வெப்ப அலை சூழல்களைப் போல உணரப்படும் என்று கணிக்கப் பட்டு உள்ளது.
- குளிர்ச்சியூட்டுவதற்கான நடவடிக்கைகள் தற்போது நகர மின்சாரத்தில் மூன்றில் ஒரு பங்கைப் பயன்படுத்துகிறது என்பதோடு இது கோடை மாதங்களில் சுமார் மூன்றில் இரண்டு பங்காக உயர்கிறது.

- வெப்ப அழுத்தத்தால் புவனேஸ்வரின் மொத்த ஆண்டு வருமான இழப்பு தற்போது 8.6 சதவீதமாக மதிப்பிடப்பட்டுள்ளது.
- இதை வெளியிட்ட முதல் இந்திய நகரம் ஒடிசாவின் புவனேஸ்வர் ஆகும்.




# விளையாட்டுச் செய்திகள்

## ஹாக்கி ஆசியக் கோப்பை 2025





- பீகாரின் ராஜ்கிரில் நடைபெற்ற ஆடவர் ஆசிய கோப்பை ஹாக்கிப் போட்டியில் இந்தியா 4-1 என்ற கணக்கில் கொரியாவை வீழ்த்தி நான்காவது முறையாக வென்றது.
- இதன் விளைவாக, அடுத்த ஆண்டு உலகக் கோப்பைக்கு இந்தியா தகுதி பெற்றது.
- இந்த ஆண்டு ஆனது, கடந்த எட்டு ஆண்டுகளில் முதல் முறையாக இறுதிப் போட்டியில்

இந்தியா பங்கேற்றதையும், போட்டியில் ஒட்டு மொத்தமாக ஒன்பதாவது இடத்தையும் அடைந்ததைக் குறிக்கிறது.

- இந்தப் போட்டியானது ஆசிய ஹாக்கிக் கூட்டமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்டு 1982 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- ஐந்து முறை பட்டம் வென்ற தென் கொரியா அதிக பட்டங்களுக்கான சாதனையைப் படைத்துள்ளது.
- அதனைத் தொடர்ந்து, 2025 ஆம் ஆண்டில் அதன் சமீபத்திய வெற்றி உட்பட நான்கு பட்டங்களுடன் இந்தியா இடம் பெற்றுள்ளது.

# முக்கிய தினங்கள்

## சர்வதேசத் தொண்டு தினம் 2025 - செப்டம்பர் 05




- இது தொண்டு நடவடிக்கைகளை ஊக்குவிப்பதையும், தேவைப்படும் மக்களுக்கு ஆதரவளிப்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- கொல்கத்தாவின் அன்னை தெரசாவின் மறைவின் ஆண்டு நிறைவை நினைவுகூரும் வகையில் இந்த தேதி தேர்ந்தெடுக்கப்பட்டது.
- 1928 ஆம் ஆண்டு இந்தியா வந்த அவர், ஆதரவற்றவர்களுக்கு உதவுவதற்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டார்.
- 1948 ஆம் ஆண்டில் அவர் இந்தியக் குடிமகனாக மாறிய அவர் 1950 ஆம் ஆண்டு கொல்கத்தாவில் (கல்கத்தா) மிஷனரிஸ் ஆஃப் சாரிட்டி அமைப்பை நிறுவினார்.
- 1979 ஆம் ஆண்டில் அவர் அமைதிக்கான நோபல் பரிசைப் பெற்றார்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★